23rd September 1958]

(ஆ) இக்கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் 1957–58-ம் வருஷத்திலே படித்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களுள், ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a), (b) & (c) A statement [a] is laid on the table of the House.

SRI P. G. MANICKAM : கல்லூரிகளிலே படிக்கும் மாணவிகளிலே 100-க்கு 1 சத விகிதம்கூட ஹரிஜன மாணவிகள் படிப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் ஹரிஜன மாணவிகளுக்கு சலுகைகள் கொடுத்து அதன் மூலம் அதிக மாணவிகள் படிப்பதற்கான வாய்ப்பை சர்க்கார் ஏற்படுத்துவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணினவர்கள்தான் கல்லூரிக்குப் போக முடியும். எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணுமல் கல்லூரிக்குப் போக முடியாது. அப்படி பாஸ் பண்ணியார் யார் விண்ணப்பித்துக்கொண்டார்களோ அவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. R. VISWANATHAN : கோயம்புத்தூர் அவிநாசிலிங்கம் ஹோம் ஸயன்ஸ் கல்லூரியிலே இருக்கும் 56 பேரிலே ஹரிஜன மாணவிகள் ஒருவரும் இல்லை. இந்த ஹோம் ஸயன்ஸ் கல்லூரியில் ஹரிஜன மாணவிகள், பின் தங்கிய வகுப்பைச்சேர்ந்த மாணவிகள் சேர்க்கப்பட்டால் இம்மாதிரி துறையில் பயிற்சி பெருவதற்கு வாய்ப்பு இருக்கும்.

MR. SPEAKER : Let the hon. Member resume his seat. He is making a speech. He must ask questions. Next question.

Travelling allowance drawn by Ministers

MR. SPEAKER : The hon. Member Sri Authimoolam is not in his seat. The question and the answer will be printed in the proceedings.

* 443 Q.—SRI D. S. AUTHIMOOLAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the amount of travelling allowance drawn by each Minister in 1957–58?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [b] is laid on the table of the House.

Rural indebtedness

* 444 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal for scaling down debts incurred by peasants?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. K. PALANISAMI : உணவு உற்பத்தியை அடிப்படையாக வைத்துக்கொண்டு இம்மாதிரி கொடுக்க முடியாத கடன்களை எல்லாம் ஆந்திர சர்க்கார் செய்தது போல ஒரு பரிசீலனைக் கமிட்டியை நியமித்து ஏற்பாடு செய்யக்கூடாதா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கேள்வியானது scaling down of debts-ஐப் பற்றியது. ஏதாவது திட்டமிருக்கிறதா என்று கேட்டதற்கு " இல்லை " என்று பதில் சொன்னேன்.

---

[a] Printed as Appendix IV on pages 583–584 infra.
[b] Printed as Appendix V on page 584 infra.